05 03 2012 6 30

திங்கட்கிழமை மாலை

## தலைப்புச் செய்திகள்

1. உத்தரப்பிரதேசம், பஞ்சாப், மணிப்பூர், கோவா, உத்ரகாண்ட் ஆகிய மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

2. கிராமப்புற மற்றும் தொலைதூர பகுதிகளில் வசிக்கும் ஏழை எளிய மக்கள் நலனுக்காக மத்திய அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதாக பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் கூறியிருக்கிறார்.

3. கூடங்குளம் அணுமின் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விரைவில் நல்ல முடிவு எடுப்பார் என்று பிரதமர் அலுவலக இணை அமைச்சர் திரு வி நாராயணசாமி தெரிவித்திருக்கிறார்.
4. சமையல் எரிவாயு டேங்கர் லாரி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் இன்று ஐந்தாவது நாளாக நீடிக்கிறது.
5. பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

■ *இனி விரிவான செய்திகள் --*

*//><><><><//*

உத்தரப்பிரதேசம், பஞ்சாப், மணிப்பூர், கோவா, உத்ரகாண்ட் ஆகிய மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை எண்ணப்படுகின்றன.

இதற்காக விரிவான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிவிப்பதற்கான ஏற்பாடுகளையும் தேர்தல் ஆணையம் செய்துள்ளது.

உத்திரபிரதேசத்தில் 403 தொகுதிகளுக்கு வாக்கு எண்ணிக்கை பலத்த பாதுகாப்புடன் மேற்கொள்ளப்படுகிறது.

பஞ்சாபில் 117 தொகுதிகளுக்கான வாக்கு எண்ணிக்கை 56 மையங்களில் நடைபெறுகிறது.

மணிப்பூர், கோவா, உத்தரகாண்ட் மாநிலங்களிலும் வாக்கு எண்ணிக்கை மேற்கொள்ள விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

//><><><><//

2014 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் வாக்களிப்பவர்களின் எண்ணிக்கையை கணிசமான அளவில் உயர்த்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக மத்திய தேர்தல் ஆணையத்தின் தலைமை இயக்குநர் திரு அக்ஷய் ராவத் தெரிவித்திருக்கிறார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட வாக்காளர் கல்வி மற்றும் தேர்தல் பங்கேற்பு திட்டம் நடந்து முடிந்த ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் வாக்கு எண்ணிக்கையை உயர்த்துவதற்கு பெரிதும் உதவியதாகக் குறிப்பிட்டார்.

மணிப்பூரை தவிர மற்ற மாநிலங்களில் வாக்களித்தவர்களின் சதவீதம் சாதனை அளவை எட்டியிருப்பதாகத் தெரிவித்தார்.

இந்த மாநிலங்களில் மக்களுக்கு தேவையான தேர்தல் குறித்த தகவல்களை அளிப்பதிலும், அவர்களை ஊக்கவிப்பதிலும் தேர்தல் ஆணையம் முனைப்பான நடவடிக்கைகள் எடுத்திருப்பதை திரு அட்ஷய் ராவத் சுட்டிக்காட்டினார்.

//><><><><//

பொருளாதார சீர்திருத்தம் மற்றும் நவீனமயமாக்குதலின் பயன்களை ஏழை எளிய மக்களும் பெறுவதற்கு மத்திய அரசு புதிய வழிகளை ஆராய்ந்து வருவதாக பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் கூறியிருக்கிறார்.

புதுதில்லியில் நடைபெறும் ஆப்பிரிக்க – ஆசிய ஊரக மேம்பாட்டு அமைப்பின் பொன்விழா நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், ஊரக பகுதிகளிலும், தொலைதூர பகுதிகளிலும் உள்ள மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதிலும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

கிராமப்புறங்கள் பொருளாதார ரீதியாக மேம்படுவதற்கு புதிய வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டுமென்றும், இதற்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சியும், தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திறனும் ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று கூறினார்.

வேளாண் அறிவியலில் புதிய கண்டுபிடிப்புகளை கொண்டு வரும் நோக்கில் 500-க்கும் மேற்பட்ட கல்வி உதவித் தொகைகளை அரசு அறிமுகம் செய்யவுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

தூய்மையான குடிநீர், தரமான கல்வி மற்றும் அடிப்படை சுகாதார வசதிகளை ஆப்பிரிக்க நாடுகளுடன் இணைந்து மிகச்சிறப்பாக இந்தியா மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

//><><><><//

அரிசி, கோதுமை மற்றும் பருத்தி உற்பத்தியில் நடப்பு ஆண்டில் சாதனை இலக்கு எட்டப்படும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சரத்பவார் தெரிவித்திருக்கிறார்.,

புதுதில்லியில் நடைபெறும் இரண்டு நாள் கரீப் பருவ மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், உணவு தானிய உற்பத்தி 25 கோடி டன்னுக்கும் கூடுதலாக இருக்கும் என்று தெரிவித்தார்.

அரசின் உதவியுடன் விவசாயிகளின் கடுமையான உழைப்பால் இந்த சாதனைகளை படைக்க முடிந்ததாக அவர் குறிப்பிட்டார்.

நன்செய் சாகுபடி பரப்பில் அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு உற்பத்தித்திறன் மேம்படுத்தப்பட்டதாக அவர் கூறினார்.

12-வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் வேளாண்துறையின் இயந்திரமயமாக்கல் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு முடிவு செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

//><><><><//

மக்களின் தேவைக்கேற்ப அரசு அதிகாரிகள் முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டும் என்று பிரதமர் அலுவலகம் மற்றும் பணியாளர் நலத்துறை இணை அமைச்சர் திரு வி நாராயணசாமி கூறியிருக்கிறார்.

இன்று புதுச்சேரியில் மக்களை மையமாகக் கொண்ட அரசு நிர்வாகம் என்ற தலைப்பிலான இரண்டுநாள் மின் ஆளுமை மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், வெளிப்படையான, அனைவரையும் உள்ளடக்கிய மக்களை மையமாகக் கொண்ட நிர்வாகத்தை வழங்க வேண்டுமென்ற அரசின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் ஒத்துழைப்புத்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஒரு மாநிலத்தில் பின்பற்றப்படும் நல்ல நிர்வாக நடைமுறைகளை மற்ற மாநிலங்களில் உள்ள அதிகாரிகளும் தெரிந்துகொள்ள இத்தகைய மாநாடுகள் வழிவகுக்கும் என்றும் திரு நாராயணசாமி குறிப்பிட்டார்.

//><><><><//

உள்நாட்டுச் சந்தையில் இயற்கை துணிநூல் தட்டுப்பாடு ஏற்பட்டதை அடுத்து பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்துள்ளது.

நடப்பு ஆண்டில் 85 லட்சம் பொதிகள் ஏற்கனவே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள போதிலும், மேலும் 66 லட்சம் பொதிகள் ஏற்றுமதி செய்யப்படுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நடப்பு ஆண்டில் 355 லட்சம் பொதிகள் பருத்தி உற்பத்தி இருக்கக்கூடும் என்று பருத்தி ஆலோசனை வாரியம் மதிப்பீடு செய்துள்ளது.

இதனிடையே பருத்தி ஏற்றுமதிக்கு மத்திய அரசு விதித்துள்ள தடையை விலக்கிக் கொள்ள வேண்டுமென்று பிஜேபி கோரியுள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு பிரகாஷ் ஜவ்தேக்கர், உள்நாட்டு சந்தையில் பணப்பயிர்களின் விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார்.

//><><><><//

சமையல் எரிவாயு டேங்கர் லாரி உரிமையாளர்கள் மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தம் தொடரும் என்று லாரி உரிமையாளர் சம்மேளனத் தலைவர் திரு பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நாமக்கலில் இன்று நடைபெற்ற சம்மேளனத்தின் பொதுக்குழு கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தார்.

( சவுண்ட் பைட் - பொன்னம்பலம் )

எண்ணெய் நிறுவனங்கள் அறிவித்துள்ள வாடகை உயர்வை ஏற்கமுடியாது என்றும், புதிதாக 600 லாரிகளுக்கு பணி ஆணை வழங்கவேண்டும் என்ற கோரிக்கை நீடிப்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதனிடையே சமையல் எரிவாயு டேங்கர் லாரி உரிமையாளர்களின் வேலைநிறுத்தம் இன்று ஐந்தாவது நாளாக நீடிக்கிறது.

//><><><><//

தமிழக அமைச்சரவைக் கூட்டம் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தலைமையில் இன்று சென்னை தலைமைச் செயலகத்தில் சுமார் 2 மணி நேரம் நடைபெற்றது.

கூடங்குளம் அணுமின் நிலையப்பிரச்சனை, தமிழ்நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள மின்சார பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

//><><><><//

கூடங்குளம் அணுமின் நிலைய திட்டத்தை செயல்படுத்துவது குறித்து முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா விரைவில் நல்ல முடிவு எடுப்பார் என்று தாம் நம்புவதாக பிரதமர் அலுவலக இணை அமைச்சர் திரு வி நாராயணசாமி கூறியிருக்கிறார்.

இன்று சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த அணுமின் நிலையம் செயல்படத் தொடங்கினால் தமிழகத்தின் மின் பற்றாக்குறை ஆயிரம் மெகாவாட் அளவுக்கு குறையும் என்று கூறினார்.

கூடங்குளம் அணுமின் திட்டத்தை செயல்படுத்துவதில் தமிழக அரசு ஒத்துழைப்புத் தருவதாகவும், விரைவில் மாநில அரசின் ஆதரவுடன் இந்த திட்டம் தொடங்கும் என்றும் திரு நாராயணசாமி தெரிவித்தார்.

//><><><><//

இம்மாதம் 18-ம் தேதி நடைபெற உள்ள சங்கரன்கோவில் தொகுதி சட்டப்பேரவை இடைத்தேர்தலில் அஇஅதிமுக வேட்பாளரை ஆதரித்து வரும் 14-ஆம் தேதி ஒரே நாளில் பத்து இடங்களில் தமிழக முதலமைச்சரும் அஇஅதிமுக பொதுச்செயலாளருமான செல்வி ஜெயலலிதா பிரச்சாரம் மேற்கொள்ளவிருக்கிறார்.

திமுக தலைவர் திரு கருணாநிதி தமது கட்சி வேட்பாளரை ஆதரித்து வரும் 15-ம் தேதி பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

//><><><><//

இலங்கையில் நடந்த சண்டையின்போது போர்க்குற்றம் புரிந்தவர்கள் மீதும், மனித உரிமைகளை மீறியவர்கள் மீதும், நடவடிக்கை எடுக்கக்கோரி சென்னையில் தடையை மீறி மறியல் செய்வதற்காக இலங்கை தூதரக அலுவலகத்துக்கு செல்ல முயன்றபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு ராமகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர் திரு பீமாராவ் உட்பட 200-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

//><><><><//

சேலம் மாவட்டத்தில் வனப்பகுதிகளில் கோடை காலத்தில் தீ பரவாமல் தடுக்கவும், வன விலங்குகள் வெளியேறாமல் தவிர்க்கவும், பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று மாவட்ட நிர்வாகம் முடிவுசெய்துள்ளது.

தீ தடுப்பு பாதுகப்பு நடவடிக்கைகள் குறித்து இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு மகரபூஷனம் தலைமையில் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர், வனப்பகுதியில் தீ ஏற்பட்டால் பொதுமக்கள் உடனடியாக வன அலுவலர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

( சவுண்ட்பைட் / மகரபூஷணம் )

//><><><><//

நிலஒதுக்கீடு தொடர்பான இரண்டு வழக்குகளில் கர்நாடக முன்னாள் முதலமைச்சர் திரு பி எஸ் எடியூரப்பாவுக்கு எதிராக லோக் ஆயுத்தா நீதிமன்றம் இன்று கைது வாரண்டு பிறப்பித்துள்ளது.

அவருடைய இரண்டு மகன்கள், மருமகன் மற்றும் முன்னாள் மாநில அமைச்சர் திரு கிருஷ்ணய்யா ஷெட்டி ஆகியோருக்கும் கைது வாரண்டு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

//><><><><//

சென்னை மற்றும் புவனேஸ்வரத்திலிருந்து ராமேஸ்வரம் செல்லும் இரண்டு ரயில்களும் தேவகோட்டை ரஸ்தா ரயில் நிலையத்திலும், சோழன் விரைவுரயில் ஆடுதுறை ரயில் நிலையத்திலும் வரும் 17 ஆம் தேதி முதல் நின்று செல்வதற்கான உத்தரவை ரயில்வே அமைச்சர் திரு தினேஷ் திரிவேதி பிறப்பித்துள்ளார்.

தி மு க நாடாளுமன்றக் குழு தலைவர் திரு டி ஆர் பாலு விடுத்த கோரிக்கையை ஏற்று ரயில்வே அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக திரு டி ஆர் பாலு செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

//><><><><//

சென்னை வானொலி நிலைய வர்த்தக ஒலிபரப்பு பிரிவின் நிலைய உதவி இயக்குநராக திரு ந.முருகன் இன்று பதவியேற்றார்.

சேயோன் என்ற புனைபெயரில் சென்னை வானொலியின் எப்ஃ எம் ரேன்போ-வில் வண்ணக்களஞ்சியம், சிகரத்தை நோக்கி உள்ளிட்ட சிறப்பு நிகழ்ச்சிகளை அவர் தொகுத்து வழங்குகிறார்.

//><><><><//

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தாட்கோ மூலம் சிறு தொழில் தொடங்க பத்து பயனாளிகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் நிதியுதவியை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார்.

//><><><><//

திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட 168 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளை அம்மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆஷிஷ் சாட்டர்ஜி அறிவுறுத்தினார்.

//><><><><//

முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இரண்டாவது இறுதிப் போட்டி நாளை அடிலெய்டில் ஆஸ்திரேலியா – இலங்கை அணிகளுக்கு இடையே நடைபெறுகிறது.

//><><><><//

இந்திய பாகிஸ்தான் நாடுகளின் பார்வை இழந்தோருக்கான கிரிக்கெட் போட்டி தொடர் வரும் பத்தாம் தேதி சென்னையில் தொடங்குகிறது.

End of News